# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 21 | February பிப்ரவரி | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



**என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன்..**

மத்தேயு 13:35

கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| தனி நபர் வேத... | 8 |
| சிறுவர் பகுதி | 10 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)


**OUR ENGLISH TV PROGRAM**


**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**





**WORLD VEDIO BIBLE SCHOOL ENGLISH BOOKS NOW AVAILABLE IN INDIA**

**INTERNATIONAL EDITION - "USA PRINTING"**

**கிருபையுள்ள வார்த்தை**

**ஆண்டவருடைய உவமைகளினால் நம்மை உருமாற்றும் வார்த்தை**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 103**

# ஏன் உவமைகளால் பேசினார்?

ஆசிரியர் உரை

P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், உன்னதமான தெய்வீக போதகர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!**

ஆண்டவர் இயேசு இந்த பூமியில் இருந்த நாட்களில் மக்களிடையே சத்தியத்தை போதிக்கும் போது, அநேக உவமைகளை சொன்னார்; அதாவது, உவமைகளைக் கொண்டு பேசினார். ஆகையால், அவைகளைக் குறித்து இந்த மாதம் உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

உவமைகளைத் திறமையாகப் பயன்படுத்தி கற்பிப்பதில் ஆண்டவருக்கு நிகர் அவரே! இன்றும் அவருடைய உவமைகள் மக்களுடைய மனதில் பசுமையாக இருக்கின்றன. இந்தக் கற்பிக்கும் உத்தியை இயேசு, ஏன் அடிக்கடி பயன்படுத்தினார்? அவருடைய உவமைகள் சக்தி வாய்ந்தவையாக இருந்ததற்கு என்ன காரணம்? என்பதை அறிவோம்.

## ஆண்டவரும் அவரின் உவமைகளும்

நம்மில் அநேகருக்கு கிடைக்காத ஓர் அரிய பாக்கியம், ஆண்டவர் இயேசுவுடன் பயணம் செய்த சீடர்களுக்குக் கிடைத்தது. இந்த உலகின் ஒப்பிடமுடியாத, மிகச்சிறந்த, உன்னதமான போதகரிடமிருந்து அவர்கள் நேரடியாகக் கற்றுக்கொண்டனர். கடவுளுடைய வார்த்தையில் பொதிந்துள்ள அர்த்தத்தையும், மெய்சிலிர்க்க வைக்கும் சத்தியங்களையும் அவர் விளக்குகையில், அவருடைய குரலை நேரடியாகக் கேட்டனர். அந்த குரலின் கனிவையும், அதிகாரத்தையும் ஒரு சேரக்கேட்டனர்.

நமது ஆண்டவர், தாம் கற்பிக்கும் விஷயங்கள் அனைத்தும், கற்றுக் கொள்பவர்களாகிய தம் அடியார்களின் மனதைவிட்டு நீங்காமலிருக்க, ஓர் எளிய வழிமுறையைக் கையாண்டார். அது தான் உவமைகள்! அவர் உவமைகளைத் திறமையாகப் பயன்படுத்தி, மிகச்சிறப்பாக தம்முடைய அடியார்களுக்கு அன்று கற்பித்தார். கற்றுக்கொள்ளும் மனதுடன் அவரிடம் வருகின்ற அனைவருக்கும் பைபிளின் வாயிலாக இன்றும் கற்பிக்கின்றார், இனியும் கற்பிப்பார்.

அவருடைய உவமைகள் பெரும்பாலும், பரலோக அரசை மையப்படுத்தியே இருந்தன. பரலோக அரசையும், பரலோக மகிமையையும், பரலோக கடவுளையும் அவருடைய அன்பையும் விளங்க செய்வதற்காக, அவர் உவமைகளை மிகவும் நேர்த்தியாக பயன்படுத்தி போதித்தார். தாம் நன்கு அறிந்ததை, அறியாத தம் சீடர்களுக்கு உவமையின் மூலம் அறிவித்தார். ஏனெனில், மனதைத் தூண்டும் உவமைகளை மக்கள் எளிதில் மறக்க மாட்டார்கள்.

உவமைகள் காதுகளைக் கண்களாய் மாற்றுகின்றன; கேட்கும் விஷயங்களை மனதில் கற்பனை செய்து, அவற்றைக் காட்சிகளாகப் பார்க்க உதவுகின்றன. நன்கு புரிந்து கொள்வதற்கு, மனக் காட்சிகள் அற்புத கருவிகளாக இருப்பதால், புரியாத விஷயங்களைக்கூட எளிதில் கிரகித்துக்கொள்வதற்கு உவமைகள் உதவுகின்றன. அவை வார்த்தைகளுக்கு உயிர் கொடுக்கின்றன; மேலும், நம் நினைவைவிட்டு நீங்கா பாடங்களை கற்பிக்கின்றன.

உவமைகள் என்பவை சிறு கதைகளாகும். வார்த்தைகளைவிட உவமைகளே, இறைவனையும் வாழ்வின் நோக்கத்தையும் நாம் நன்றாக அறிய உதவுகின்றன. கதையாகவும் படமாகவும் நம் உள்ளத்தில் என்றும் அழியாமல் நிலைநிற்கின்றன. அநேக புத்தகங்கள் இல்லாத காலத்தில், இயேசு, உவமைகள் வாயிலாக மக்கள் உள்ளத்தில் சத்தியத்தை விதைத்தார். அவர் கூறிய உவமைகளில் ஆழ்ந்த கருத்துக்களும், உயர்ந்த பாடங்களும் ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கின்றன. இயேசுவின் உவமைகள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அவர் நேரடியாக யூதர்களிடம் கூறினாலும், அந்த

உவமைகள் அனைத்துக் காலங்களுக்கும், பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களுக்கும் பொருந்துவதாகவே இருக்கின்றன.

## தீர்க்கத்தரிசினத்தின் நிறைவேற்றம்

**மத்தேயு 13:34,35** "இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்; உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை. என் வாயை உவமைகளில் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

முதலாவதாக, ஆண்டவர் இயேசு தன்னை குறித்து சொன்ன தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றுவதற்காக உவமைகளை பயன்படுத்தனார். உவமைகளைப் பயன்படுத்தியே மேசியா பேசுவார் என நுற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே பரலோக கடவுள் தம்முடைய தீர்க்கத்தரிசிகளைக் கொண்டு சொல்லியிருந்தார். அப்படியானால், இந்தக் கற்பிக்கும் உத்தியை பரலோக கடவுளே உயர்வாய் கருதியுள்ளார் என்று தெளிவாக புரிந்துக்கொள்ள முடிகின்றது. **சங்கீதம் 78:1-2** "என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள், என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்."

தன்னைக் குறித்து சொன்ன தீர்க்கத்தரிசினங்களை ஆண்டவர் நிறைவேற்றினார் என்பதிலிருந்து, தேவனுடைய வார்த்தைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு இருந்த முனைப்பையும், நாம் நம்மை குறித்துச்சொல்லப்பட்டுள்ள கடவுளுடைய வார்த்தைகளின்படி நடக்க வேண்டும் என்பதனையும் தெளிவாக நம்மால் அறிந்துக்கொள்ள முடிகின்றது. **யோவான் 10:27** "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது."

கடவுளுடைய வார்த்தைகளின்படி நடப்பது மிகவும் கடினமானதல்ல என்பதனை நாம் விசுவாசிக்க வேண்டும். **1 யோவான் 5:3** "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல."

மேலும் அவைகள் இலகுவானவைகள் மற்றும் மெதுவானவைகள் என்று ஆண்டவர் இயேசுவும் சொன்னார். **மத்தேயு 11:29-30** "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்."

பரலோக பிதாவின் வார்த்தையின்படி வாழ்வது கடினம் என்ற எண்ணத்தை சத்துருவானவன் நமக்குள் விதைக்க நாம் இடமளிக்காமல், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, பிசாசிற்கு எதிர்த்து நிற்போம். **யாக் 4:7** "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."

மேலும், பிசாசின் தூதுவர்கள் போல சிலர், 'அதெல்லாம் கடவுளுடைய வார்த்தையின்படி எல்லாம் வாழ முடியாது' என்றும், 'யாராவது வாழ்கிறார்களா? அவர்களை காண்பி!' என்றும் சொல்லி, நம்மை தேவ சட்டத்திற்கு கீழ்படியவிடாமலும், தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கவிடாமலும் தடை செய்வார்கள். கவனம் தேவை **1பேதுரு 5:8** "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே."

## மறைபொற்களை வெளிப்படுத்துதல்

இரண்டாவதாக, ஆண்டவர் இயேசு மறைபொருள்களை வெளிப்படுத்த உவமைகளை பயன்படுத்தினார். **மத்தேயு 13:35** "என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

இந்த உலகம் படைக்கப்பட்ட நாள் முதல், பரலோக கடவுளால் மறைக்கப்பட்ட காரியங்களை, அதாவது, பரலோக கடவுளின் மனதிற்குள் இருந்த மகிமையான சத்தியங்களை, அவருடைய ஏக புத்திரனாகிய ஆண்டவர் இயேசு தனது உவமைகளால் வெளிப்படுத்தினார். **உபா 29:29**

"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின் படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்."

கர்த்தருக்கே உரிய (சொந்தமான அல்லது தெரிந்து) அநேக காரியங்களை ஆண்டவர் இயேசு வெளிப்படுத்தினார். அவைகளை வெளிப்படுத்திய ஆண்டவர் இவ்வாறாக சொன்னார். **மத்தேயு 10:26** "அவர்களுக்கு பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை."

பரலோக கடவுள் தாம் அறிவிக்க வேண்டியவற்றை எல்லாம் தமது குமாரன் மூலம் வெளிப்படுத்திவிட்டார். **எபி 1:1–2** "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்."

ஆகையால், நம்மில் யாரும், நூதனமாக (புதியதாக) ஒன்றை பிதா வெளிப்படுத்துவார் என எண்ணிக்கொள்ள வேண்டாம். நாம் பரலோகம் செல்லும்படியாக, வேண்டிய யாவற்றையும் கிறிஸ்து வெளிப்படுத்திவிட்டார். எழுதப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரின் வேத வாக்கியங்களை மிஞ்சி யோசிக்காமலும் **(1கொரி 4:6)**, அவைகளோடு ஒன்றையும் கூட்டாமலும், ஒன்றையும் குறைக்காமலும் **(வெளி 22:18–19)** இருப்போம்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு பவுல் அத்தேனே பட்டணத்திற்கு சென்ற போது, அந்த மக்கள் எப்படி நூதனமான காரியங்களை பேசவும், கேட்கவும் விரும்பியது போலவே, இன்றைய நாட்களிலும் கிறிஸ்தவ மத வட்டாரத்திலே அநேகர் இருக்கின்றனர். வேதாகமத்திற்கு விரோதமான போதனையா? இல்லையா? என யோசிக்காமல், அப்படிப்பட்ட காரியங்களை கேட்பதில் ஆர்வம் காண்பிக்கின்றனர். அதன் விளைவு, மன்னித்துக்கொள்ளுங்கள், அந்த சொறிப்பிடித்த காதுகளுக்கு ஏற்றபடி பேச, ஆயிரக்கணக்கான கள்ள போதகர்கள் உருவாகி, அவர்கள் நூற்றுக்கணக்கான கள்ள சபைகளை பிறப்பித்துள்ளனர். அநேகர் தங்கள் அறியாமையினாலும், அதிக ஆர்வக் கோளாறினாலும் பரலோக கடவுளுடைய நாமம் தூஷிக்கப்படவும், அவரது திட்டமும், சித்தமும் செயல்பட தடையாகவும் ஆகிவிட்டனர் என்பது மிகவும் வேதனையான காரியமாகும்.

## பெருமையானவர்களுக்கு மறைத்தல்.

மூன்றாவதாக, ஆண்டவர் இயேசு, மனம் 'இறுகிப்போயிருந்தவர்கள்; அதாவது சத்தியத்தை அறிந்துக்கொள்ள விருப்பமில்லாதவர்கள், சத்தியத்தினை அறிந்துக்கொள்ளாமலிருக்க உவமைகளைப் பயன்படுத்தினார். **மத்தேயு 13:10–12** "அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்."

ஆண்டவர் சில சமயம், அவர் சொன்ன உவமையின் முழு அர்த்தத்தையும் புரிந்துகொள்வதற்கு, மக்களே வந்து அவரிடம் விளக்கம் கேட்கும்படி அவர் எதிர்பார்த்தார். மனத்தாழ்மையுள்ளவர்கள் அவரிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். அகந்தையுள்ளவர்களோ அப்படிக் கேட்க மனமில்லாமல் இருந்தார்கள் **(மத்தேயு 13:36; மாற்கு 4:34)**. சத்தியத்தை அறிய வேண்டுமென்ற தாகம் இருந்தவர்களுக்கு ஆண்டவரின் உவமைகள் சத்தியத்தை வெளிப்படுத்தின. ஆனால் கர்வம் பிடித்தவர்களுக்கு அவைகள் மறைபொருளாகவே இருந்தன.

இன்னொரு மொழி பெயர்ப்பில், "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது; அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை" என்று கூறப்பட்டுள்ளது. காரணம் அவர்களது இறுமாப்பான மனம். அவர்கள் கற்றுக்கொள்ளும் படியாக ஆண்டவரிடம் வராமல், குற்றம் கண்டுபிடிக்கவே வந்தனர். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எப்போதுமே எதிர்த்து நிற்கின்றார் மற்றும் பெருமையானவர்கள் எப்பொழுதும் தேவனுக்கு எதிரானவர்களே என்பதனை நினைவில்கொள்வோம் **(யாக் 4:6)**. அவர்களது இறுமாப்பை ஆண்டவர், ஏசாயாவின்

தீர்க்கதரிசனத்தை சுட்டிக்காட்டி விளக்கினார் **மத்தேயு 13:13–15** "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள் இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே."

ஆண்டவர் ஒருமுறை பன்றிகளுக்கு முன்பாக முத்துக்களை போட வேண்டாம் என தம் சீடர்களை எச்சரித்தார். ஏனெனில் அந்த முத்துக்களை அவைகள் பயன்படுத்த அறியாதவை மற்றும் அவைகளின் மதிப்பும், மகிமையும் அறியாததினால் அவைகள் அதனை வீணாக்கிவிடும் என்றார். **மத்தேயு 7:6** "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்."

பெருமை என்பது பிசாசின் குணம், ஆகையால் பெருமையுள்ளவர்கள் ஒருபோதும் கற்றுக்கொள்வதில்லை, அவர்கள் கற்க கூடாதபடி பெருமை தடை செய்கின்றது. தாழ்மை என்பது சர்வவல்ல ஆண்டவரின் குணம் **(மத் 11:29)**. அது நம்மை கற்றுக்கொள்ளவும், கற்றதை கடைபிடிக்கவும் அதாவது கீழ்படிதலுக்கு நேராக வழிநடத்தும்.

இறுதியாக, அன்பானவர்களே! ஆண்டவர் இயேசு, உவமைகளைப் பயன்படுத்தியதற்கு இன்னும் பல நல்ல காரணங்களை சொல்லலாம். உவமைகள் மக்களுடைய ஆர்வத்தைத் தட்டியெழுப்பி, கூர்ந்து கேட்க அவர்களைத் தூண்டின. உவமைகள் மக்களின் மனதில் சொல்லோவியங்களாக உருவெடுத்தன. எனவே தாழ்மை மற்றும் ஆர்வமுள்ள மக்களால் அவற்றை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. நாம் உலகில் பிறந்து வாழ்வது தற்செயலாக ஏற்பட்டதல்ல. உலகம் மனிதராகிய நமக்காகவே படைக்கப்பட்டுள்ளது. நாம் பரலோக கடவுளின் பிள்ளைகளாகவும், அவருடைய உடைமைகளுக்குப் பொறுப்பாளராகவும் உலகில் வாழவேண்டும்.

மனிதர்களாகிய நம்மைத் தவிர, மற்ற உயிரினங்கள் அனைத்தும் கடவுள் வகுத்த வழியில் வாழ்கின்றன. ஆனால், மனிதராகிய நமக்கு, நாம் விரும்பியபடி வாழும் உள்ளம் கொடுக்கப்பட்டுள்ளதால், வாழ்வின் நோக்கம் என்ன என்பதை அறியாமலும், அறிய விரும்பாமலும் உலகில் வாழ்கிறோம். நம் உடல், உயிர், உடமைகள், அனைத்தும் இறைவனுக்குரியது என்பதை அறியாமல், தன்னலத்துடனும், தற்பெருமையுடனும் வாழ்ந்து மரிக்கிறோம். தன்னலமின்றி, அன்புடன் உலகில் நாம் வாழவேண்டும் என்பதையும், இந்த உலக வாழ்வோடு நம் வாழ்வு முடிந்து போவதில்லை என்பதையும், நாம் இறைவனின் பிள்ளைகளாக நிலைவாழ்வில் (பரலோகில்) என்றும் வாழ்வோம் என்பதையும் இயேசுவின் உவமைகள் நமக்கு அறிவிக்கின்றன. ஆகையால், அவரின் உவமைகள் கற்றுத்தருகின்ற பாடங்களை கற்போம், கடைபிடிப்போம், பாக்கியவான்களாகவும், பாக்கியவதிகளாகவும் வாழ்வோம். **மத்தேயு 13:16–17** "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும், அவைகள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

## சிறுவர்க்கான கேள்விகள்

1. அழைப்பை உதாசினம் செய்தவர்களை ராஜா என்ன செய்தார்?

2. இளைய மகன் யாருக்கு விரோதமாக பாவஞ் செய்து விட்டேன் என்றான்?

3. சரீர மரணத்திற்கு பின்பு நாம் பெறும் வாழ்வு எப்படிப்பட்டது?

4. சமாரியன், அடிபட்டவனுக்கு என்ன செய்தான்?

5. நாம் யாருக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டும்?

# நியாயமற்ற நீதிபதியும் – விதவையும்

சகோதரி : பேபி ராஜா



அன்பார்ந்த சகோதரிகள் யாவருக்கும், நீதியுள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என் வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறை நாம் ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு உவமையை பற்றி உங்களிடம் பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

சோர்ந்து போகாமல் ஜெபம் செய்ய வேண்டுமென்று இந்த உவமையை ஆண்டவர் சொன்னார். இந்த உவமையில் 3 நபர்கள் முக்கியமானவர்கள் 1. நீதிபதி, 2. விதவை, 3. நம் தேவன் (கடவுள்). இவர்களை மையமாக கொண்டே இந்த உவமை இருக்கின்றது. ஆகையால் இந்த மூவரையும் பற்றி படிப்போம்.

## 1. நீதிபதி

**லூக்கா 18:2** "ஒரு பட்டணத்திலே ஒரு நியாயதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாமலும் இருந்தான்."

அந்த நியாயாதிபதியை பற்றிய அறிமுகமே, நம்மை கொஞ்சம் பதற வைப்பதாகவே இருக்கின்றது. ஜனநாயக மக்களின் கடைசி நம்பிக்கை நீதிபதிகளே. அப்படிப்பட்ட நீதிபதி ஒருவர் கடவுளுக்கு பயப்படாதவராகவும், மனிதர்களை மதிக்காதவராகவும் இருந்தால், இந்த கொடுமையை என்னவென்று சொல்வது. ஆயினும், அந்த விதவை தொடர்ந்து அவனை நச்சரித்தபடியால். வேறு வழியின்றி அவளது வழக்கை விசாரிக்க முன்வந்தான். **லூக்கா 18:4–5** "வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார்."

## 2. விதவை

**லூக்கா 18:3** "அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்."

கடவுளுக்கு பயப்படாத, மனிதர்களை மதிக்காத ஒருவனிடத்தில் நியாயம் கேட்டு சென்றிருக்கின்றாள் என்பதை நினைக்கும் போது அந்த விதவையின் நிலை நம்மை கொஞ்சம் பரிதபிக்க வைக்கின்றது. ஆயினும் அந்த விதவை விடாமல், தொடர்ந்து அந்த நியாயாதிபதியிடம் வேண்டுகோளை வைத்துக்கொண்டே இருந்தாள். அவள் சோர்ந்தே போகவில்லை. அவள் நியாயாதிபதியை பற்றி யோசிக்கவில்லை. தம்முடைய தேவையை குறித்தே அதிகம் யோசித்தாள். ஆகையால் தான் அவள் சோர்வடையாமல் கேட்டாள்.

## 3. பரலோக கடவுள்

**லூக்கா 18:6–8** "பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தபடியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்."

இந்த உவமையை ஆண்டவர் இயேசு, நம்மை படைத்த தேவனிடம் கொண்டு போய் முடிக்கின்றார். மனிதர்கள் மீது அளவற்ற அன்பும், முடிவற்ற இரக்கமும் கொண்டவர் நம் தேவன் **(புலம்பல் 3:22)**. அவர் நீதியுள்ள நியாயாதிபதி. உத்தமமாக நடக்கிறவர்களுக்கு நன்மையை நிச்சயமாக வழங்காமல் இருக்க மாட்டார் **(சங்கீதம் 84:11)**. அவரை நோக்கி ஜெபிக்கின்ற நாம் சோர்ந்து போகாமல், விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபிக்கின்றவர்களாக இருப்போம். நம் தேவன் அதினதின் காரியங்களை அதினதின் காலங்களில் நேர்த்தியாக செய்கின்றவர் **(பிர 3:11)** என்பதனை மறக்க வேண்டாம். சோர்ந்து போகாமல் ஜெபிப்போம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

# தொடர் 29 வெளிப்படுத்தின விசேஷம் : நாம் ஜெயம்கொள்வோம்!

தொடர்ச்சி

எதிர்காலவியல் அணுகுமுறை (இப்புத்தகத்தை இன்றைய நாட்களின் தலைப்புச்செய்திகளுக்குப் பொருத்தமான தென்று "விளக்கியுரைத்தல்" மற்றும் இப்புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி இன்னமும் எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளால் ஆனதென்று கண்ணோக்குதல்) என்பது, சிங்கங்களுக்கு இரையாக எரியப்படவிருந்த கிறிஸ்தவருக்கு அதிகம் ஆறுதல் அளிப்பதாயிருந்திராது.

இப்புத்தகத்தை வாசிப்பதில், ஒவ்வொரு காட்சியினுடைய "பெரிய கருத்தை" தேடுங்கள்; விவரங்களில் கண்ணோக்கை மங்கவிடாதீர்கள். இப்புத்தகம் ஒரு எளிய செய்தியைக் கொண்டுள்ளது; விஷயங்கள் இப்போது, மோசமானவைகளாகக் காணப்பட்டாலும், நீங்கள் தேவனுடைய பக்கத்தில் நிலைத்து இருந்தால், நீங்கள் (உபத்திரவத்தை) மேற்கொள்வீர்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்!

இப்புத்தகத்தின் எழுத்தாளர் தாம் யோவான் என்று மாத்திரம் அடையாளப்படுத்துகின்றார் (1:1, 4,9). இது இப்போது துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டின் கடற்கரையில் ஏஜியின் கடலில் இருந்த பத்மு தீவிற்கு நாடுகடத்தப்பட்டிருந்த (1:9) யோவானுக்கு, மிகச்சிறப்பாகப் பொருந்துகிறது. "ஆசியாவில் இருந்த ஏழு சபைகளே " இந்தப் புத்தகத்தைத் தொடக்கத்தில் பெற்றுக்கொண்டனர் (1:4), இவைகள் ஆசியா (இப்போது இது துருக்கியின் மேற்குக் கடற்கரைப் பகுதியாகும்) என்ற ரோம மகாணத்தில் உண்மையிலேயே இருந்த ஏழு சபைக்குழுமங்களாகும். இது அனேகமாக, நீரோ அல்லது டொமீஷியன் என்ற அரசனின் ஆளுகையின்போது, ரோம அரசினால் கிறிஸ்தவர்கள் கடுமையாக உபத்திரவப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். நீரோவின் காலத்தில் உபத்திரவம் என்பது அதிகமாக உள்ளூரிலேயே நிகழ்ந்தபடியால், பல எழுத்தாளர்கள் இது டொமீஷியனின் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்தையே முன்மொழிகின்றனர். இது அவனது ஆட்சிகாலத்தின் முடிவில் எழுதப்பட்டிருக்கலாம் என்றால், கி.பி. 94-96 என்பதே இப்புத்தகம் எழுதப்பட்ட காலமாகும்.

## வரைகுறிப்பு

I. ஏழு பொன் குத்துவிளக்கு மத்தியில் கிறிஸ்து உலாவுதல்: ஏழு சபைகள் (1-3).

II. ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகம் : ஒரு வெளிப்படுத்துதல் (4-7).

III. ஏழு எக்காளங்கள் ஊதப்படுதல்: ஒரு எச்சரிக்கை (8-11).

IV. சபையின் விரோதிகளின் அறிமுகம்: பெரிய வலுசர்ப்பமும் இரு மிருகங்களும் (12-14).

V. தேவகோபத்தின் ஏழு கலசங்கள் ஊற்றப்படுதல்: தண்டனை (15 ; 16).

VI. சபையின் விரோதிகள் அழிக்கப்படுதல்: மகாபாபிலோன் உட்பட, வலுசர்ப்பம் தவிர (17-19).

VII. வலுசர்ப்பம் அழிக்கப்படுதல், புதிய வானமும் புதிய பூமியும் (20-22).

## வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திலிருந்து பாடங்கள்

"மிருகத்தின் எண்" (13:18) என்பது ஏதேனும் ஒரு நாளில் மனிதர்களின் நெற்றியில் பதிக்கப்படுகிற உண்மையான எண்ணாக இருப்பதில்லை."6,"என்ற எண், ஏறக்குறைய "7" (முழுமைத்துவம்) என்றிருப்பதால், அது (ஏறக்குறைய "7" என்றிருப்பதால்) பழங்காலத்தில் வஞ்சகத்தையும், (அது "7" ஆக இருப்பதில்லையாதலால்) தோல்வியையும் குறிப்பதாகக் கருதப்பட்டது. "666" என்ற எண், (துன்மார்க்க சக்தியான) மிருகமானது பல மக்களை வஞ்சிக்கும், ஆனால் கடைசியில் தோல்வியடையும் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. துன்மார்க்கம் வெற்றியடையாது!

வெளிப்படுத்தின விசேஷம் 20ன் "ஆயிரம் ஆண்டுகள்" என்பது நேரடியாக ஆயிரம் ஆண்டுகள் கொண்ட காலத்தைக் குறிப்பிடுவதில்லை. "1000" என்பது 10 X 10 X 10 என்பதாக உள்ளது. அதாவது, "முழுமைத்துவம்" வலுவாகக் கூறப்படுகிறது. இது,


இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற போது (நடபடிகள் 2:33-36:1 கொரிந்தியர் 15:25) தொடங்கப்பட்ட, அவருடைய முழுமையான பூரணமான, முற்றிலுமான ஆளுகையைக் குறிக்கிறது. துன்மார்க்கம் இவ்வுலகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது போன்று காணப்படலாம், ஆனால் இயேசு கட்டுபாடு செலுத்துகின்றவராய் இருக்கிறார். "நல்லவர்கள்" வெற்றியடைவார்கள்!

நாம் இன்றைய நாட்களில் நம்மைப் பற்றிக் கண்ணோக்கும் போது, ஊக்கம் குறைந்துபோவதென்பது சுலபமாகும். இப்படிப்பட்ட எதிர்சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு வெற்றியடைய முடியும்? முதல் நூற்றாண்டின் முடிவில் இருந்த கிறிஸ்தவர்கள், அவர்களைப் பற்றிக் கண்ணோக்கியபோது, ரோமபுரியினுடைய "வெற்றிக்கொள்ளப்பட முடியாத" வல்லமையைக் கண்டனர். கிறிஸ்தவம் எவ்வாறு உயிர் வாழ முடியும்? அது உயிர்வாழ்ந்தது. அது கர்த்தருடைய பலத்தின் மூலமாக, ரோமாபுரிப் பேரரசின்மீது வெற்றிசிறந்தது! என்ன நடந்தாலும், கர்த்தருடன் நிலைத்து நின்று, விசுவாசத்தில் நிலைகொண்டிருக்க வேண்டும் என்பதே, நமக்குச் செய்தியாக உள்ளது (2:10). யாரோ ஒருவர், "இப்புத்தகத்தின் கடைசி அதிகாரத்தை நான் வாசித்திருக்கின்றேன் - நமது பக்கமே வெற்றியடைகிறது!" என்று கூறியிருக்கின்றார்.

பொதுவான செய்திகள்

# கா.ந. அண்ணாத்துரை

காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை



**தொடர்ச்சி**

### ஆங்கிலம் பேச மறுத்த அண்ணா

அன்றைய காலகட்டத்திலும் கொஞ்சம் படித்துவிட்டால் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும், அதிலும் கல்லூரியில் படித்துவிட்டால் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்ற மனப்பான்மையும் ஆங்கில மோகமும் அதிகமிருந்தது. ஆங்கிலம் பேசினால் கவுரவம் என்று எண்ணிய காலமது. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த அண்ணா விடுமுறையில் அவர் பாட்டியின் இல்லம் அடைந்தபொழுது, அவரின் பாட்டியார் சிறிதளவு ஆங்கிலம் பேசிக் காட்டுமாறு எவ்வளவு வற்புறுத்தியும் ஆங்கிலம் பேச மறுத்து ஆங்கிலம் பேசினால் உனக்கென்ன புரியும், தவிர நாம் இப்பொழுது பேசிக்கொண்டுதான் இருக்கின்றோம். தேவையில்லாமல் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். அவர் பாட்டியின் அன்பு கட்டளையாக இருந்தாலும், போலியாக , தேவையில்லாமல் ஆங்கிலம் பேசுவதில் அண்ணாவிற்கு உடன்பாடில்லை.

### பேச்சாற்றல்

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பாகச் சொற்பொழிவாற்றவும் எழுதவும் வல்லவர். இவர் பல முற்போக்கு சீர்திருத்த நாடகங்களையும் எழுதியிருக்கிறார். அவற்றுள் சிலவற்றை இயக்கி இருக்கிறார். சிலவற்றுள் நடித்திருக்கிறார். தமிழ்த் திரைபடங்களுக்கு கதை வசனம் எழுதியவரும் தன்னுடைய திராவிட சீர்திருத்தக் கருத்துக்களை அதன் மூலம் முதன்முதலாக பரப்பியவரும் இவரே. நடுத்தர வர்க்க நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவரான அண்ணாத்துரை, தன் ஆரம்பகால வாழ்க்கையை பள்ளி ஆசிரியராகத் துவங்கியவர், சென்னை இராசதானியில் (மெட்ராஸ் பிரிசிடென்சி) தன் அரசியல் ஈடுபாட்டினை முதன்முதலில் பத்திரிக்கையாளராக, பத்திரிக்கையாசிரியராக வெளிப்படுத்தினார்.

### மொழிப்புலமை

ஒருதடவை சில இங்கிலாந்து மாணவர்கள் அண்ணாவை பரிகசிப்பதற்காக அவரிடமும் ஏனென்றால் என்ற வார்த்தையை மூன்று தடவை தொடர்ந்து வருகிற மாதிரி வாக்கியம் கூற முடியுமா என்று கேட்டனர். அதற்கு அவர்,

" No sentence can be with because because, because is a conjuction. "

எந்தத் தொடரிலும் இறுதியில் வராச்சொல் ஏனென்றால், ஏனென்றால், ஏனென்றால் என்பது இணைப்புச்சொல். என்று உடனே பதிலளித்தார்.

தொடரும்...

# இராஜா வீட்டுக் கல்யாணம்

சிறுவர் பகுதி

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா, எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் யாவரையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆண்டவர் சொன்ன ஒரு உவமை பற்றி படிப்போமா?

ஒரு இராஜா தன் மகனுக்கு திருமணம் செய்து வைக்கிறார். இந்த திருமணத்திற்கு அநேகர் அழைக்கப்பட்டனர், விருந்து ஆயத்தமாயிருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள் வரவில்லை. அவர்களை அழைக்கும்படியாக இராஜா தன் வேலைக்காரர்களை அனுப்பினார். ஆனால் அவர்களுக்கோ வர மனதில்லாதிருந்தது. வேலைக்காரர்களை அசட்டைப்பண்ணினார்கள்.



ஒருவர் வயலுக்கும், மற்றொருவர் வியாபாரத்திற்கும் போய்விட்டார்கள். சிலர் வேலைக்காரர்களை பிடித்து கொலையும் செய்தார்கள். இராஜா இதை கேள்விப்பட்டு, அவர்களுக்கு தண்டனைக் கொடுத்தார்.

பிறகு, தெருவின் வீதிகளில் நிற்கின்ற எல்லாரையும் திருமணத்திற்கு அழையுங்கள் என்றார். அதனால் விருந்து சாலை முழுவதும் நிறைந்தது. ஆனால் கல்யாணம் வஸ்திரம் தரித்திராத ஒருவன் விருந்து சாலையில் அமர்ந்திருந்தான். ராஜா விருந்து சாலையை பார்க்க வரும்போது அவனைக்கண்டு சிநேகிதனே! எங்கே உன் கல்யாண வஸ்திரம் என்று கேட்டார். அதற்கு அவன் பேசாமல் இருந்தான். உடனே இராஜா வேலைக்காரரை அழைத்து இவனை அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த புறம்பான இருளிலேப் போடுங்கள் என்றார்.

கடவுளுக்கு பிரியமானவர்களே! இராஜா தேவன், குமாரன் என்பது இயேசு சபைக்கு வாங்க என்று அழைக்கும்போது, மற்றும் சபையில் பாட்டுபுக் எடுத்துவைக்க, அல்லது பாய்போட, சபையை சுத்தம் செய்ய அழைக்கும் போது நீங்கள் எப்படியிருக்கீறீர்கள்? ஆசையாய் வந்து செய்கிறீர்களா? அல்லது உதாசனப்படுத்துகிறீர்களா? சபையில் ஈடுபடுகிற குணம், சபையில் எல்லா நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும் சுபாவம் இல்லை என்றால் தண்டனை உறுதி. அழைக்கப்பட்டவர்கள் அநேகராக இருந்தாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலராக தான் இருந்தார்கள். கடவுளுக்குப் பிரியமானவர்களே! அழைப்புக்கு பாத்திரவான்களாக இருப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : மத்தேயு 22:14** "அந்தபடியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்."

இப்படிக்கு உங்கள் அண்ணன்

– அன்பு ஏசுதாஸ்

# மனந்திரும்பிய மகன்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு உவமையைப்பற்றி கற்றுக்கொள்வோம்.

ஒரு மனுஷனுக்கு 2 மகன்கள் இருந்தார்கள். அவர்களில் இரண்டாவது பையன் வந்து தன் அப்பாவிடம் சொத்தில் ஒரு பங்கை எனக்கு கொடுங்கள் என்றான். அவன் கேட்டபடியே அவரும் சொத்தை தன் குமாரருக்கு கொடுத்தார். கொஞ்ச நாள் சென்ற பிறகு, இரண்டாவது மகன் தன் பங்கையெல்லாம் எடுத்துக்கொண்டு தூர தேசத்திற்கு போய்விட்டான். அங்கே போய் தவறான வழியில் தன் பணத்தையெல்லாம் செலவழித்து தீர்த்தான். அப்போது அவன் இருந்த தேசத்திலே கொடிய பஞ்சம் உண்டானது. இவனுக்கு சாப்பிடவே வழியில்லாததினால், ஒரு வருடத்தில் பன்றிகளை மேய்க்கும் வேலைக்கு சென்றான். அந்த பன்றியின் உணவு கூட அவனுக்கு சாப்பிட கிடைக்கவில்லை.

பிறகு தான், அவனுக்கு புத்தி வந்தது. தான் செய்த தவறை உணர்ந்தான். தன் தகப்பனும் அவருடைய வீடும் நினைவிலே வந்தது. என் அப்பாவிடம் வேலை செய்கிறவர்களுக்கு போதுமான சாப்பாடு உண்டு. ஆனால் நானோ பசியினால் சாகிறேன். அதினால் நான் இப்பொழுதே என் அப்பாவிடம் போய். கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாக பாவஞ் செய்துவிட்டேன். இனி உங்கள் பிள்ளையென்று

சொல்வதற்கும் எனக்கு தகுதியில்லை. அதினால் என்னை உங்கள் வேலைக்காரரில் ஒருவராக சேர்த்துக்கொள்ளும் என்று கேட்கப்போகிறேன் என்று மனதிலே தீர்மானம்பண்ணி, தன் தகப்பன் வீட்டை நோக்கி ஓடினான்.

அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? இவன் மீண்டும் வருவதை தூரத்திலே கண்ட அப்பா, அவனை நோக்கி ஓடி, அவன் கழுத்தை கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தார். தன் வேலைக்காரனை அழைத்து, இவனுக்கு உயர்ந்த உடைகளை உடுத்தி, கைக்கு மோதிரத்தையும், கால்களுக்கு காலணிகளை போடுங்கள் என்றும், அவன் மனந்திரும்பி வந்த சந்தோஷத்தினை நாம் கொண்டாட கொழுத்த கன்றை அடித்து விருந்து செய்யுங்கள் என்று கட்டளையிட்டான்.

குட்டீஸ், இந்த உவமையிலிருந்து நாம் நம்மை படைத்த கர்த்தரைக் குறித்து ஒன்றை புரிந்துகொள்ளலாம். சில நேரங்களில் நாமும் அந்த இளைய மகனைப்போல தவறுகளை (பாவங்களை) செய்துவிட்டு, அதற்காக வருந்துகிறோம். நான் செய்ததை கடவுள் மன்னிக்கவே மாட்டார் என்றுகூட நினைப்போம். ஆயினும், ஆயினும்,



நாம் செய்த தவறை உணர்ந்து, நாம் கடவுளிடம் மன்னிப்பு கேட்கும்போது, அவர் எப்பொழுதும் நம்மை நேசிக்கிறவராகவும், நல்லவைகளை மட்டுமே நாம் செய்யும்படியாகவும் விரும்புகிறார். தவறுகளை விட்டுவிட்டு மன்னிப்பு கேட்டு, நன்மைகளை செய்வோமா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : அப்போஸ்தலர் 17:30.**

"அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்."

– குயினி பிரதீப்

## லாசரு – ஐஸ்வரியவான் உவமை

சிறுவர் பகுதி

செல்ல குட்டீஸ்! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு உவமையைப்பற்றி கற்றுக்கொள்வோம்.

ஒரு ஊரில் ஒரு மிகப்பெரிய பணக்காரன் இருந்தான். அவர் மிகவும் வசதி வாய்ப்புகளுடன்,



விதவிதமான உணவுகள் உண்பவராகவும், விதவிதமான உடைகள் உடுத்துகிறவராகவும் இருந்தார். அதே ஊரில் லாசரு என்னும் ஒரு தரித்திரனும் இருந்தார். அவன் அந்த பணக்காரன் வீட்டு மிச்ச மீதி உணவுகளை உண்டு உயிர் வாழ்பவராக இருந்தார். அந்த உணவிற்காக அவர் சில நேரங்களில் நாய்களுடன் போட்டிபோட வேண்டியிருந்தது.

சில நாள் சென்ற பின்பு அந்த தரித்திரன் லாசரு மரித்தான். அவன் பரதீசிலே ஆபிரகாமீன் மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். பிறகு அந்த பணக்காரன் மரித்தான். அவனை அடக்கம் செய்தார்கள். ஆனால் அவனோ, பாதாளத்திலே மிகவும் வேதனைபடுகின்ற ஒரு இடத்தில் இருந்தான். அந்த பணக்காரன் வேதனை தாங்காமல், ஆபிரகாமையும் அவர் மடியிலே லாசருவையும் கண்டான். அந்த பணக்காரன் மிகவும் தாகத்தினால், ஆபிரகாமிடம், தகப்பனே, லாசருவின் விரல் நுனியில் தொட்டு ஒரு சொட்டு தண்ணீரு தர சொல்லுங்கள். நான் நெருப்பினால் மிகவும் வேதனைபடுகிறேன் என்று கூப்பிட்டான்.

ஆபிரகாமோ, மகனே உனக்கு என்னால் உதவி செய்ய முடியாது. யாரேனும் அங்கே இருந்து இங்கே வரவும், இங்கே இருந்து அங்கே வரவும் விருப்பபட்டாலும் வரமுடியாதபடி, பெரிய பிளவு இருக்கின்றது. நீ சொகுசான வாழ்க்கை வாழ்ந்தாய். லாசரு வேதனைகளை அநுபவித்தான். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான். அதை நினைத்துக்கொள் என்றார்.

உடனே பணக்காரன், தகப்பனாகிய ஆபிரகாமே, என் சகோதரர்கள் ஐந்து பேரும் இந்த வேதனை உள்ள இடத்திற்கு வராதபடி, லாசருவை போய் அவர்களுக்கு எச்சரிக்க சொல்லும், மரித்தோரிலிருந்து ஒருவன் வந்து சொன்னால், நம்புவார்களே என்றான். ஆபிரகாமோ,

அவர்களுக்கு தீர்க்கத்தரிசிகள் உண்டு அவர்கள் சொல்வதை கேட்டு திருந்தாதவர்கள், லாசரு போய் சொல்லியும் திருந்தமாட்டார்கள் என்று சொன்னார்.

குட்டீஸ், பணக்காரன் உயிரோடு இருக்கும்போது தன் இஷ்டபடி வாழ்ந்தான், மரித்த பின்பு அவன் விருப்பம் ஒன்றும் நடக்கவில்லை. இந்த பூமியில் நாம் வாழும் நாட்கள் மிஞ்சிப்போனால் 60 லிருந்து 80 வருடமாகும். ஆனால், இந்த சரீர மரணத்திற்கு பின்பு நாம் பெறும் வாழ்வு முடிவே இல்லாத வாழ்வாகும். ஆகையால், இங்கே வாழும்போதே கடவுளுக்கு பயந்து, நேர்மையாக மற்றும் ஒழுக்கமாக வாழ்க்கை வாழ்வோம். அப்பொழுது தான் மரித்தபின்பு நிலைவாழ்வு நிம்மதியானதாக கிடைக்கும். இல்லையேல், முடிவற்ற நரக வேதனை தான்.

**மனப்பாடவசனம் : யோவான் 5:29** "அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்."

– பெவர்லி

# நல்ல சமாரியன்

சிறுவர் பகுதி

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். இந்த முறை நாம் ஆண்டவர் சொன்ன உவமைகளில் ஒன்றான நல்ல சமாரியன் உவமை பற்றி தெரிந்துக்கொள்வோமா?

ஒரு முறை ஆண்டவர் மக்களுக்கு சத்தியத்தை போதித்துக்கொண்டிருக்கும் போது, நியாயாஸ்திரி (வழக்கறிஞர்) ஒருவன் வந்து, ஆண்டவரே! நித்திய வாழ்வை பெற நான் என்ன செய்ய வேண்டும், என்று கேட்டான். ஆண்டவரோ, நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்று கேட்டார். அவனோ, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்மாவோடும் உன் முழுப் பலத்தோடும் அன்பு கூறு வாயாக உன் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.



ஆண்டவரே, சரியாக சொன்னாய், அதையே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார். அவனோ, தன்னை நீதிமானாக காண்பிக்க எனக்கு பிறன் யார் என்று கேள்வி கேட்டான். அப்பொழுது ஆண்டவர் ஒரு உவமை சொன்னார்.

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

பிறகு, அந்த வழக்கறிஞரை பார்த்து ஆண்டவர்: கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்கு அவனோ: அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது ஆண்டவர் அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்.

மழலை செல்லங்களா, இந்த பூமியில் பரலோக கடவுள், அவரை போல நாம் நம்மை செய்கிறவர்களாக மற்றும் நேர்மையானவர்களாக இருக்கும்படி படைத்தார். ஆகையால், நாம் நம்மால் இயன்றவரை வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் அதாவது நம்மை வேண்டாமென்று நினைப்பவர்கள் என அனைவருக்கும் நன்மை செய்து , கடவுள் நம்மை படைத்த நோக்கத்தை நிறைவேற்றுவோம். அவருடைய ஆசீர் பெறுவோம்.

**மனப்பாடவசனம் : எபேசியர் 2:10** "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."

– பிரியா ஆன்டனி

# ஓர் ஆண்டிற்குள் முழு வேதாகமத்தை படிக்க அட்டவனை

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| மார்ச் 16 | நியாயாதிபதிகள் 7-8 |
| மார்ச் 17 | நியாயாதிபதிகள் 9-10 |
| மார்ச் 18 | நியாயாதிபதிகள் 11-14 |
| மார்ச் 19 | நியாயாதிபதிகள் 15-17 |
| மார்ச் 20 | நியாயாதிபதிகள் 18-21 |
| மார்ச் 21 | ரூத் |
| மார்ச் 22 | 1 சாமுவேல் 1-3 |
| மார்ச் 23 | 1 சாமுவேல் 4-6 |
| மார்ச் 24 | 1 சாமுவேல் 7-10 |
| மார்ச் 25 | 1 சாமுவேல் 10-12 |
| மார்ச் 26 | 1 சாமுவேல் 13-14 |
| மார்ச் 27 | 1 சாமுவேல் 14-16 |
| மார்ச் 28 | 1 சாமுவேல் 17-19 |
| மார்ச் 29 | 1 சாமுவேல் 20-22 |
| மார்ச் 30 | 1 சாமுவேல் 23-25 |
| மார்ச் 31 | 1 சாமுவேல் 26-31 |
| ஏப்ரல் 1 | 2 சாமுவேல் 1-3 |
| ஏப்ரல் 2 | 2 சாமுவேல் 4-6 |
| ஏப்ரல் 3 | 2 சாமுவேல் 7-10 |
| ஏப்ரல் 4 | 2 சாமுவேல் 11-13 |
| ஏப்ரல் 5 | 2 சாமுவேல் 14-16 |
| ஏப்ரல் 6 | 2 சாமுவேல் 17-19 |
| ஏப்ரல் 7 | 2 சாமுவேல் 20-21 |
| ஏப்ரல் 8 | 2 சாமுவேல் 22-24 |
| ஏப்ரல் 9 | 1 இராஜாக்கள் 1-2 |
| ஏப்ரல் 10 | 1 இராஜாக்கள் 2-4 |
| ஏப்ரல் 11 | 1 இராஜாக்கள் 5-7 |
| ஏப்ரல் 12 | 1 இராஜாக்கள் 8-9 |
| ஏப்ரல் 13 | 1 இராஜாக்கள் 10-11 |
| ஏப்ரல் 14 | 1 இராஜாக்கள் 12-13 |
| ஏப்ரல் 15 | 1 இராஜாக்கள் 14-17 |
| ஏப்ரல் 16 | 1 இராஜாக்கள் 18-20 |
| ஏப்ரல் 17 | 1 இராஜாக்கள் 21-22 |
| ஏப்ரல் 18 | 2 இராஜாக்கள் 1-4 |
| ஏப்ரல் 19 | 2 இராஜாக்கள் 5-8 |
| ஏப்ரல் 20 | 2 இராஜாக்கள் 9-12 |
| ஏப்ரல் 21 | 2 இராஜாக்கள் 13-16 |
| ஏப்ரல் 22 | 2 இராஜாக்கள் 17-19 |
| ஏப்ரல் 23 | 2 இராஜாக்கள் 20-22 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| ஏப்ரல் 24 | 2 இராஜாக்கள் 23-25 |
| ஏப்ரல் 25 | 1 நாளாகமம் 1-3 |
| ஏப்ரல் 26 | 1 நாளாகமம் 4-5 |
| ஏப்ரல் 27 | 1 நாளாகமம் 6-7 |
| ஏப்ரல் 28 | 1 நாளாகமம் 8-10 |
| ஏப்ரல் 29 | 1 நாளாகமம் 11-13 |
| ஏப்ரல் 30 | 1 நாளாகமம் 14-16 |
| மே 1 | 1 நாளாகமம் 17-19 |
| மே 2 | 1 நாளாகமம் 20-22 |
| மே 3 | 1 நாளாகமம் 23-25 |
| மே 4 | 1 நாளாகமம் 26-29 |
| மே 5 | 2 நாளாகமம் 1-4 |
| மே 6 | 2 நாளாகமம் 5-8 |
| மே 7 | 2 நாளாகமம் 9-12 |
| மே 8 | 2 நாளாகமம் 13-16 |
| மே 9 | 2 நாளாகமம் 17-20 |
| மே 10 | 2 நாளாகமம் 21-24 |
| மே 11 | 2 நாளாகமம் 25-28 |
| மே 12 | 2 நாளாகமம் 29-32 |
| மே 13 | 2 நாளாகமம் 33-36 |
| மே 14 | எஸ்ரு 1-3 |
| மே 15 | எஸ்ரு 4-7 |
| மே 16 | எஸ்ரு 8-10 |
| மே 17 | நெகேமியா 1-4 |
| மே 18 | நெகேமியா 5-7 |
| மே 19 | நெகேமியா 8-10 |
| மே 20 | நெகேமியா 11-13 |
| மே 21 | எஸ்தர் 1-4 |
| மே 22 | எஸ்தர் 5-10 |
| மே 23 | யோபு 1:1-5:16 |
| மே 24 | யோபு 5:17-8:22 |
| மே 25 | யோபு 9:1-12:12 |
| மே 26 | யோபு 12:13-16:10 |
| மே 27 | யோபு 16:11-20:11 |
| மே 28 | யோபு 20:12-24:12 |
| மே 29 | யோபு 24:13-29:13 |
| மே 30 | யோபு 29:14-32:10 |
| மே 31 | யோபு 32:11-35:16 |
| ஜுன் 1 | யோபு 36:1-39:12 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| ஜுன் 2 | யோபு 39:13-42:17 |
| ஜுன் 3 | சங்கீதம் 1-4 |
| ஜுன் 4 | சங்கீதம் 5-8 |
| ஜுன் 5 | சங்கீதம் 9-10 |
| ஜுன் 6 | சங்கீதம் 11-16 |
| ஜுன் 7 | சங்கீதம் 17-18 |
| ஜுன் 8 | சங்கீதம் 19-21 |
| ஜுன் 9 | சங்கீதம் 22-24 |
| ஜுன் 10 | சங்கீதம் 25-27 |
| ஜுன் 11 | சங்கீதம் 28-30 |
| ஜுன் 12 | சங்கீதம் 31-33 |
| ஜுன் 13 | சங்கீதம் 34-35 |
| ஜுன் 14 | சங்கீதம் 36-37 |
| ஜுன் 15 | சங்கீதம் 38-39 |
| ஜுன் 16 | சங்கீதம் 40-42 |
| ஜுன் 17 | சங்கீதம் 43-45 |
| ஜுன் 18 | சங்கீதம் 46-48 |
| ஜுன் 19 | சங்கீதம் 49-54 |
| ஜுன் 20 | சங்கீதம் 52-54 |
| ஜுன் 21 | சங்கீதம் 55-57 |
| ஜுன் 22 | சங்கீதம் 58-60 |
| ஜுன் 23 | சங்கீதம் 61-64 |

| நாள் | வசனப்பகுதி |
|---|---|
| ஜுன் 24 | சங்கீதம் 65-67 |
| ஜுன் 25 | சங்கீதம் 68-69 |
| ஜுன் 26 | சங்கீதம் 70-71 |
| ஜுன் 27 | சங்கீதம் 72-73 |
| ஜுன் 28 | சங்கீதம் 74-76 |
| ஜுன் 29 | சங்கீதம் 77-78 |
| ஜுன் 30 | சங்கீதம் 79-81 |

– தொடரும்...

## சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. Mrs. M. ஜெனீ – கரூர்
2. E. கார்த்க் ராஜா – மதுரை
3. S. ஜெயராஜ் – கோவை

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. செந்தில் குமார் – கரூர்
2. M. ராஜா – கரூர்
3. M. ஜோனாத்தான் – கரூர்
4. S. லக்சிதா – கரூர்
5. S. கனிஸ்கா – கரூர்

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# பிப்ரவரி மாத கேள்விகள்

1. “என் வாயை உவமைகளினால் திறப்பேன்” என்றவர் யார்?

2. ‘பூர்வ காலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்’ என வாசிப்பதெங்கே?

3. யோவான், தேவனுடைய கற்பனைகள் எப்படிப்பட்டதல்ல என்கிறார்?

4. இயேசு தன் நுகம் மற்றும் சுமை எப்படிப்பட்டது என்கிறார்?

5. இந்த கடைசி நாட்களில் தேவன், யார் மூலம் திருவுளம் பற்றினார்?

6. விசுவாசத்தில் உறுதியாயிருந்தது யாருக்கு எதிர்த்து நிற்க வேண்டும்?

7. யாக்கோபு, பிசாசு நம்மைவிட்டு எப்பொழுது ஓடிப்போவான் என்று சொல்கிறார்?

8. எழுதபட்டதற்கு மிஞ்சி என்ன செய்ய கூடாது?

9. முத்துக்களை யாருக்கு முன் போடக்கூடாது?

10. சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என இயேசு யார் யாரை குறிப்பிடுகிறார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-03-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. ஆதி 39:2 | 6. யாக் 4:7 |
| 2. நியா 14:6 | 7. கொலே 4:2 |
| 3. அப் 10:38 | 8. 2தீமோ 2:16 |
| 4. 2கொரி 13:11 | 9. 2நாளா 15:2 |
| 5. 1பேதுரு 3:4 | 10. மத் 28:18-20 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. குளோரி திலகவதி – சென்னை
2. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
3. Mrs. மேரி ராஜ் – மதுரை
4. Mrs. ஹெலன் திலக் – மதுரை
5. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
6. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
7. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
8. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
9. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
10. Mrs. ஹெப்ஸிமா தாமஸ் – படப்பை
11. Mrs. லீலா ஜோசப் – கோவை
12. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
13. Mrs. பூமணி இஸ்ரவேல் – நெல்லை
14. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
15. Mrs. M. ஜெனி – கரூர்
16. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
17. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
18. Mrs. D. மீனாள் – மூலனூர்
19. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
20. R. சரோஜா – தென்கலம்
21. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
22. S. பாக்கியராஜம் – மதுரை
23. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
24. S. டேவிட் சாந்தகுமார் – தென்காசி
25. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
26. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
27. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
28. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
29. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
30. S. ஜெயராஜ் – கோவை
31. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
32. Mrs. சுந்தரபாய் வில்லியம் – சேலம்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுபித்துக் கொள்ளவும்.
நன்றி!



G Pay

ஆண்டு சந்தா : ரூ. 120/-
G-Pay No. 92 4421 4421

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Place of Publication : Arasaradi, Madurai
Printer's Name : N. JAYAKARTHIKEYAN
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th February 2021
Posted at Arasaradi HPO on 10th 11th February 2021


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்





அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

## கிருபையின் கீதங்கள்




பாடல் புத்தகம்


421 பக்கங்கள்


514 தமிழ் பாடல்கள்

29 ஆங்கில பாடல்கள்

100 சிறுவர் பாடல்களுடன்

விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431






WORLD VEDIO BIBLE SCHOOL
ENGLISH BOOKS
NOW AVAILABLE IN INDIA

INTERNATIONAL EDITION - "USA PRINTING"


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To